

# பழனி குமார் கவிதைகள் - ஓர் அறிமுகம்

திரு . பழனி குமார் அவர்கள் எழுத்து . காம் வாயிலாக , இணையதளக் கவிஞராகப் பலருக்கும் ஏற்கனவே அறிமுகமானவர். அந்த முறையில் அவரை அறிந்திடும் வாய்ப்பைப் பெற்றிராத , மற்றவர்களுக்காக , எழுதப்படுவதே இந்த அறிமுகவுரை.

இரவும் பகலும் இடைவிடாமல் இயங்கும் ஒரு பெரிய தொழிற் சாலையின் முக்கியமான இயந்திரமான ஒரு கொதிகலனுக்கு இணையானது திரு. பழனி குமார் அவர்களின் உள்ளம். அந்த கொதிகலனைப் போலவே அதுவும் நாள் முழுவதும் கொதித்துக் கொண்டிருக்கும் . அவருடைய உள்ளத்தில் எப்போதும் பல்வேறு வகைப்பட்ட சிந்தனைகள் பொங்கிக் கொண்டிருக்கும் போலும் . இப்படி அவர் ஒரு சிந்தனைக் களஞ்சியமாகத் திகழ்கிறார் . அவரது கவிதைகளில் காணப்படும் பல்வேறு கருத்துக்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.

சிறு குழந்தைகளுக்குத் தொடக்கப் பள்ளிகளில் " படம் பார்த்துக் கதை சொல்வது " என்று ஒரு பயிற்சி உண்டு. திரு. பழனி குமார் அவர்கள் வளர்ந்தவராக இருப்பதால் படம் பார்த்து கவிதை பாடுகிறார். படம் பார்த்துக் கதை சொன்ன குழந்தைகளுக்குத் தங்கள் கற்பனையை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஆனால் திரு. பழனி குமார் அவர்களின் கவிதைகளில் , அவரது கவிதைத் திறனுடன் கற்பனைத் திறனும் போட்டி போட்டுக் கொண்டு மிளிர்கிறது .

கவிஞர் அவர்களின் கருத்துக்கள் அனைத்துமே பொது நலனை விழைகின்றவையாக உள்ளன . எனவே மிகப்பரந்த நோக்கம் அவரது கவிதைகளில் வெளிப்படுகிறது. அவரது பார்வையின் பரப்பை பற்றி சற்று விரிவாக பேச வேண்டியுள்ளது. பார்வை பலவிதம் . அக்கம் பக்கம் பார்ப்பது , சுற்றும் உற்றுப் பார்ப்பது, நாலா பக்கமும் பார்ப்பது, எட்டுத்திசையும் பார்ப்பது என்று பலவகை. இது தவிரப் பார்வைகள் கிட்டப் பார்வை, எட்டப் பார்வை, துட்டப் பார்வை ( துஷ்டப் பார்வை ) என்றும் வகைப்படுத்தப்படும் ஆனால் திரு. பழனி குமார் அவர்களின் பார்வை மேற்குறிப்பிட்ட எதிலும் அடங்காத பார்வை. அதை ' 360' ' டிகிரி வட்டப்பார்வை என்று கூறலாம் . சுற்றிச் சுழலும் கண்காணிப்புக் கேமராவுக்கு இணையான பார்வை கவிஞரின் பார்வை. அந்தப் பார்வையிலிருந்து எதுவும் தப்பாது. தப்ப முடியாது. அதைப் பற்றி ஒரே வரியில் சொல்வதென்றால் " என்னப் பார்வை உந்தன் பார்வை " என்றுதான் பாட வேண்டும்.

திரு. பழனி குமார் அவர்களின் பார்வை பரந்ததாக இருந்தாலும் அவரது குறிக்கோள் திசை மாறிப் போகாத ஒன்று. மகாபாரதத்து அருச்சுனன் போலக் கவிஞருக்கு பொது நலம் ஒன்றே குறி. எதைப் பார்த்தாலும் , எதைப் பற்றிச் சிந்தித்தாலும் அவரது நோக்கம் பொதுநலம் மேம்படவேண்டும் என்பதாகவே இருக்கும். பார்த்தவற்றை எல்லாம் பாடுபொருளாகவும் கேட்டவற்றை எல்லாம் தன் கவிதைக்குக் கருவாகவும் கொண்டு கவிபாடும் பேராற்றல் பெற்றவராகக் கவிஞர் திகழ்கிறார் .

சாதாரணமாக நாம் எல்லோரும் நம்முடைய செயல்பாடுகளின்போது எதிர்கொள்ளும் செய்திகள் , தகவல்கள், காட்சிகள் எல்லாமும் திரு பழனி குமார் அவர்களின் சிந்தனையைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன நாம் அவற்றில் பெரும்பாலானவற்றைக் கண்டும் காணாமலோ , பொருட்படுத்தாமல் அலட்சியமாகவோ இருந்துவிடுவோம். சிலவற்றைப் பற்றி நாம் குறைபட்டுக் கொண்டாலும் அதற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என்று இருந்துவிடுவோம். ஆனால் கவிஞர் அவர்கள் சிந்தனையில் எழுந்த எண்ணங்களை எழில்மிகு கவிதைகளாக இயற்றி நமக்கு வழிகாட்டி இருக்கிறார் . சலித்துக் கொண்டு நம்மைப்போல் சும்மா இருந்துவிடாமல் , தன் கவிதைகளின் மூலம் நம் போன்றோர் உறக்கத்தைக் கலைக்க முற்பட்டிருக்கிறார் கவிஞர். அவர்தரும் ஊக்கத்தால் நம் தூக்கத்தை கைவிட வேண்டும். அது கவிஞருக்குக் கைகொடுக்கும் செயலாகவும் , நாம் வாழும் சமுதாயத்திற்கு நம் கடமையைச் செய்வதாக அமையும்

இனி , திரு பழனி குமார் அவர்கள் எழுதிய கவிதைகளில் சிலவற்றின் கருத்துக்களைப் பார்ப்போம் . சமுதாயத்தில் சாதிமத பேதங்கள் இல்லாத சமத்துவம் நிலவ வேண்டும் என்று விரும்புகிறார் . அதற்கு அவரே எடுத்துக் காட்டாவாகவும் திகழ்கிறார் . தான் நாத்திகன் என்கிறார், ஆனால் தீபாவளி, பொங்கல், புத்தாண்டுகள், காதலர் தினம் , மகளிர் தினம் ஆகிய திருநாட்களுக்கு அவர் பிறருக்கு வாழ்த்தக் கூறுகிறார் .

இன்றைய அரசியலின் இழிந்த நிலைப்பற்றிப் பலபாடல்களில் வருந்திக் கூறியிருக்கிறார். நாட்டு நலனைக் கருத்தில் கொள்ளாமல் , மக்களுக்கு பணி செய்யும் நோக்கம் சிறிதுமின்றிச் சுயநலத்திற்காகவே அரசியலில் ஈடுபடுபவர்களைப் பற்றி வருந்தி பல பாடல்கள் எழுதி இருக்கிறார் .

பெற்றோரையும், முதியோரையும் என்றும் போற்ற வேண்டும். அவர்களை ஒருபோதும் கைவிடக் கூடாது. முதியோர் இல்லங்களுக்கு மூடுவிழா நடத்த வேண்டும். கூட்டுக் குடும்பம்தான் வேண்டும் என்கிறார். முதுமையால் வலிமையின்றி வருந்துவோருக்கு இரக்கப்படுகிரார் . முதுமையில் தனிமையிலும், வறுமையாலும் வாடுவோரையும் , வருந்தி உழைப்போரையும் அவரவர் பெற்ற மக்கள் பொறுப்பேற்று ஆதரிக்க வேண்டுமென்கிறார் . நண்பர்களையும் போற்றிக் கவிதைகள் எழுதி இருக்கிறார். அவர்களது நிறை குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்.

சாதிப் பிரிவினைக் கூடாது, மத வேற்றுமை கூடாது என்னும் கவிஞர் காதல் திருமணங்களை ஆதரிக்கிறார். ஆனால் காதலில் நிதானம் , பொறுமை அவசியம் . அவசரம் , ஆத்திரம் , வேகம் கூடாது என்கிறார். வரதட்சணையாக வாழ்க்கை வசதிப் பொருள்களையும் , பணத்தையும் கேட்கும் பழக்கத்தைக் கண்டிக்கிறார். காதலின் சின்னம் எனப்படும் தாஜ் மகாலைப் போற்றுகிறார்.

கடமை செய்வதில் தவறாதவர்களைக் குறிப்பாக முதுமை, வறுமை, சூழ்நிலை போன்ற இடையூறுகளையும் கடந்து தவறாமல் கடமை செய்பவர்களைக் கவிஞர் போற்றி பாராட்டுகிறார். அத்தகையவர்களுக்கு இரக்கப்படுகிரார் . சமுதாயத்தில் திரண்ட செல்வம் உடையவர்கள் சுயநலத்துடன் வாழ்வதையும் , தம்மைச் சுற்றி இருக்கும் வசதி அற்றவர்களுக்கு உதவி செய்யாமல் இருப்பதையும் கண்டிக்கிறார். உழைக்க இயலாத அளவுக்கு உடல் ஊனம் உற்றவர்களுக்கு இரக்கப்பட்டு உதவி செய்து அவர்களை மதிப்புடன் நடத்துவதே மனிதத் தன்மையாகும் என்கிறார். மதம், சாதி, செல்வநிலைக் காரணமாகச் சமுதாயம் பிளவுபட்டு நில்லாமல் ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சிறந்த பண்பென்கிறார் .

உறவுகளை அவை ஏற்படும் முறையாலும் , செயல்படும் முறையாலும் விரிவாக விளக்கி நல்லது எது கெட்டது எது என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். மாற்றுத் திறனாளிகள் , திருநங்கைகள் போன்றோரின் குறையுற்ற நிலைக்கு அவர்கள் ஒருபோதும் காரணமில்லை என்பதால் அவர்கள் மீது வேற்றுமை பாராட்டாமல் மதிப்புடன் நடத்தி உதவுவது மற்ற அனைவருடைய கடமையாகும் என்கிறார் கவிஞர்.

தான் ஊழியராக பணி செய்த வங்கியைப் பற்றியும் , அதன் மாற்றத்தைப் பற்றியும் , ஊழியர் சங்கத் தலைவரைப் பற்றியும் , அவர்களது ஒற்றுமை , செய்தி மடல் ஆகியவற்றைப் பற்றியும் ஆழ்ந்த நட்புடனும் , இனிய நினைவுகளுடனும் சில கவிதைகள் இயற்றியுள்ளார் கவிஞர்.

ஒவ்வொரு வகையிலும் படும் துயரங்கள் வாடும் மனத்திற்குக் கனவுகள் மட்டுமே ஆறுதலாக அமைவதாகச் சில பாடல்களை இயற்றி ஆழ்மனத்தின் ஆசைகளின் விளைவுகளே கனவுகள் என்ற உளவியல் உண்மையை உறுதி செய்கிறார் திரு . பழனி குமார் . பெண்ணுக்குத் திருமணம் தேவை என்பதையும் , திருமண முறிவு பெற்றவர்களும் கைம்பெண் ஆனவர்களும் மறுமணம் செய்து கொள்வது அவர்களது உரிமையாகும் என்று வலியுறுத்திகிறார் கவிஞர் பழனி குமார்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதையும் , ஐதராபாத்தில் வெடிகுண்டுகள் வெடித்ததையும் குறிப்பிட்டு அதுபோன்ற தீவிரவாதச் செயல்களின் இழித்தன்மையைச் சில கவிதைகளின் வாயிலாக எடுத்துக் கூறியுள்ளார் கவிஞர்.

தாய்மொழியில் பேசவேண்டும் , தாய் மொழியில் பயில வேண்டும் , தாய்மொழி நீதிமன்ற நடைமுறை மொழியாக வேண்டும் என்ற கருத்தைச் சில பாடல்களின் வாயிலாக வலியுறித்தியிருக்கிறார் .மனித உள்ளம் எப்படி இடத்திற்கேற்பவும் , சூழ்நிலைக்கேற்பவும் , அவரவர் குறிக்கோளுக்கேற்பவும், பலவாறாக அமைந்து இயங்குகிறது என்பதைச் சில கவிதைகளின் வாயிலாக எடுத்திருரைத்திருக்கிறார் .

மனசாட்சியின் தன்மையை விளக்குகிறார். ' இக்கரைக்கு அக்கறை பச்சை ' என்பது போல கையில் இருப்பதும் , கண்முன்னே இருப்பதும் , இப்போது கிடைக்காத ஒன்றைவிடத் தாழ்ந்ததே என்ற மனப்பான்மையை விளக்கி ஒரு பாட்டியற்றியுள்ளார். இதயம் பலவகையான உணர்வுகளின் உறைவிடம் என்கிறார். ஒரு கண்ணாடியுடன் கற்பனையாக உரையாடி நல்லதைவிட தீயதே மலிந்துள்ளன என்பதை விளக்குகிறார் . மனத்தில் உறையும் நினைவுகள் நாம் கடந்துவந்த காலத்தின் சுவடுகள் என்கிறார். காலம் மனத்திற்கு ஆறுதல் தரும் ஒரு மருந்து என்கிறார். ஒருவர் ஒன்றைத் தனக்குச் சுமையென்று கருதுவது அவரது மனத்தின்படி அமைவதே என்கிறார்.

தனிமையை இனிமையானதெனக் கருதுவதும் மனத்தின் செயலே ஆகும் . பள்ளிப்பருவ நினைவுகள் மகிழ்ச்சித் தருவனவே என்கிறார். மறதி மனதிற்கு உதவி செய்வதே என்கிறார். துன்பநினைவுகளின் பதிவுகள் உறைவதும் மனத்தில்தான் என்கிறார். சிலர் தேவைக்கேற்ப மனத்தை மாற்றிக் கொள்வதைப் பச்சோந்தித்தனம் என்கிறார். பழமை மரபுகளை மனம் போற்றிப் பின்தொடர வேண்டும் என்கிறார். மனிதரின் ஆழ்மனங்களில் இருப்பவை எவை என்பதை எடுத்துரைக்கிறார். பழமையையும் புதுமையையும் ஒப்பிட்டுப் புதுமை சாரமற்றது என்கிறார். மனத்தில்தான் ஆணவம் நிலைப்பெற்றிருக்கிறது என்கிறார். இப்படி மனத்தைப் பற்றிப் பரவலான பல சிறந்த கருத்துக்களைத் திரு. பழனி குமார் அவர்கள் தனது கவிதைகள் மூலமாகத் தெரிவித்துள்ளார்.

பகுத்தறிவாளர் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் சிலர் , இன்னமும் மூட நம்பிக்கைகளை விடாமல் கொண்டிருப்பதையும் , அவற்றை அந்தரங்கமாகப் பின்பற்றுவதையும் சாடுகிறார் திரு. பழனி குமார் அவர்கள் .
இளைஞர்களுக்கு நல்வழி காட்டும் விதமாகப் பல பாடல்களில் , அவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் அறிவுரைகள் ஆகியவற்றைக் கவிஞர் எடுத்துரைக்கின்றார். அவை பெரும்பாலும் மூத்தோர் சொற்படி நடத்தல், அவர்களை மதித்தல் போன்றவை. அது மட்டுமன்றிச் செருக்கு ஆணவம் ஆகியவற்றுக்குத் தங்கள் உள்ளங்களில் இடம் கொடுக்கக்கொடாது என்றும் கூறியுள்ளார் .

வறுமை, கடன்சுமை போன்றவற்றிற்காகவும் , அல்லது தேர்வு, தொழில் ஆகியவற்றில் தோல்வி, மேலும் காதல் சிக்கல்கள் காரணமாகத் தற்கொலை செய்து கொள்வது வீரமானது. எதையும் எதிர்த்து முன்னேறி உலகினர் முன் தன் திறமையையும் உறுதியையும் வெளிக்காட்டுவதே வீரமாகும் என்று கருதுகிறார் கவிஞர் அவர்கள்.

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத உணவு , உடை, உறையுள் ஆகிய மூன்றையும் இயற்கையிடமிருந்து பெறுவதற்குக் காரணமான உழவர்களின் நிலைகண்டு இரங்குகிறார் கவிஞர். வயலிலிருந்து உணவையும், மரம் வளர்த்து அதிலிருந்து உடைக்கு மூலப்பொருளையும் , வீடுகட்ட மரங்களையும் தந்து மூன்றுக்கும் வழி செய்யும் உழவர் இனம் நொந்துபோய் ஒவ்வொருவராய் தற்கொலை செய்துகொள்வதை எண்ணி மிகவும் வருந்துகிறார் திரு . பழனி குமார். விளைபொருளுக்கு உரிய கிடைக்காமல் , முறையான மழை பெய்யாமல் , பயிர்கள்

கருகுவதும், மூழ்குவதும் உழவரை வாட்டுவதை நினைத்துக் கவிஞர் மிகவும் மனம் வருந்துகிறார்.

தன்னைச் சுற்றி எண்ணற்ற இன்னல்கள் எப்போதும் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நிலையிலும் கவிஞருக்கு ரசனை உணர்வு மங்காமல் இருக்கிறது. " இசையும் பாட்டும் " என்று ஒரு பாடல் பாடியிருக்கிறார். தலைவாழை இலையில் இன்சுவை விருந்துண்டு மகிழ்ச்சியை அனுபவித்திருக்கிறார் . வெண் புறாவைப் பார்த்து அது அமைதியின் சின்னம் என்பதால் ஆராதிக்கிறார். இசை- நடனக் காட்சியைப் படத்தில் பார்த்துச் சுவைத்திருக்கிறார். சரித்திர நாவல்களை படித்து மகிழ்ந்திருக்கிறார். அழகிய ஓவியத்தைக் கண்டு களிக்கின்றார். தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் சில பயனுள்ளவையும் , நல்லவையும் உண்டென்கிறார். கையில் மருதாணி ஓவியத்தின் நுட்பமான அழகை வியக்கின்றார் . நவீன ஓவியத்தின் பொருள் என்ன என்று வினவுகின்றார். அழகிய கட்டட அமைப்பினை வியந்து போற்றுகிறார். இப்படி அவர் கண்ட பல விரும்பாத காட்சிகளுடன், சில நல்லவற்றையும் பார்த்து மனம் மகிழ்ந்திருக்கிறார். தனக்குக் கவிதை எழுத ஒரு மேடை அமைத்துக் கொடுத்த இணையத்தளத்தையும் , அதன் வீச்சையும் பயன்களையும் இரண்டு பாடல்களில் விரித்துரைக்கின்றார் .

எந்தெந்த நிகழ்ச்சிகள் நமக்குத் துயரத்தைத் தருவன என்று ஒரு பாடலில் பட்டியலிடுகின்றார். துயரங்களில் மிகப்பெரிய துயரம் நெருங்கியவர்களது மறைவு. அதைப்பற்றி ' இறுதி ஊர்வலம் ' என்ற தலைப்பில் பாடியிருக்கிறார். சுனாமி தந்த துயரத்தைப் பதிவு செய்திருக்கிறார் ஒரு பாடலில் தண்ணீர் பற்றாக்குறை , நதிகள் வறட்சி , அதனால் வரும் பஞ்சம் ஆகிய பெரிய , பொதுவான துயர்களைச் சுட்டிக்காட்டுகிறார். ஒருசிலர் அஞ்சியதுபோல உலகம் அழியாது என்கிறார். மின்வெட்டு பெருந்துயரம் என்கிறார். லஞ்சம் கொடுக்க வேண்டியிருப்பதும் ஒரு துயரம்தான் என்கிறார். இன்பம்போலத் தோன்றும் புகைப்பிடிப்பது பல துயர்களுக்குக் காரனமாக்கும் என்கிறார். கருத்து சுதந்திரம் மறுக்கப்படுவதும் துயரமே என்கிறார் கவிஞர். சாலை விபத்துக்கள் பல குடும்பங்களைத் துயரத்தில் ஆழ்த்துகின்றன பழுதடைந்த, பாழ்பட்டுக் கிடக்கும் சாலைகள் பலரது துயரங்களுக்குக் காரணமாவதை எடுத்துக் காட்டுகிறார். இப்படி எத்தனை கோடித் துன்பமா என்று கவிஞர் கொதிக்கிறார்.

பூக்களை எதற்கெல்லாம் , எப்போதெல்லாம் பயன்படுத்துகிறோம் என்று ஒரு பாடலில் விளக்குகிறார் திரு . பழனி குமார். நல்லதற்கும் அல்லதற்கும் பூக்களைப் பயன்படுத்துகிறோம். ' அன்பு ' என்பதை ஒரு பூவாக உருவகம் செய்து ஒரு பாடல் இயற்றியிருக்கிறார். பூக்களிடையே தோன்றும் சிறுமியையும் ஒரு பூவாகவே பார்க்கிறார். பூக்களால் பூமிமகளே பூரிக்கிறாள் என்கிறார்.

பெண்களுக்கான பாலியல் வன்முறை தொடர்ந்து நிகழ்ந்து வருவது குறித்து வருந்துகிறார் கவிஞர். அக்குற்றச் செயலில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை விரைவாக வழங்கப்பட்டால்தான் தீயவர்களுக்கு அச்சம் வரும் என்று அவர் கருதுகிறார்.

இயற்கை அழகும் , செயற்கை அழகும் கவிஞரால் மிகவும் விரும்பப்படுவன. அவை காணப்படும் இடங்கள் எல்லாவற்றையும் கவிஞர் மகிழ்ச்சியோடு காண்கிறார். கடற்கரையில் ஒரு மாலைப் பொழுது , வானவில் , பூங்கா, தெருவில் போடப்படும் கோலம் , நகைகள் அணிந்த பெண் , கதிரவன் எழுச்சி , மறைதல், வீட்டிலிருந்து சன்னலுக்கு வெளியே தெரியும் காட்சி, மழை, மலை, பசும்புல்தரை , செடிகள், மரங்கள், கடலில் தனியாய் ஒரு படகு, அடர்த்தியான மரங்களின் தொகுப்பு, ஏரிக்கரைக்காட்சி , அஞ்சி நோக்கும் மான்குட்டி, விண்மீன்கள் நிறைந்த, இரவுநேர வானம் , மஞ்சள் மாலைப் பொழுது, நிலவின் எழுச்சி போன்ற அனைத்தையும் கவிஞர் தன் பாட்டால் படம் பிடித்துக் காட்டுகிறார்.

கவிதையைப் பற்றியும் ஒரு கவிதை இயற்றியிருக்கிறார் திரு பழனி குமார் அவர்கள். தனக்கு உதவியவர்களுக்கு நன்றி கூறியும், எவரும் கேட்காமலே தன்னிலை விளக்கம் அளித்தும் பாடல்களை வழங்கியுள்ளார் அவர். இரண்டு பாடல்களில் கவிஞர் தனது நகைச்சுவை உணர்வைப் பதிவு செய்திருக்கிறார். ஒன்று தவறுதலாக அடுத்த வீட்டுக்குள் நுழைந்து வாங்கிக் கட்டிக்கொண்ட தலைவனைப்பற்றியது. மற்றொன்று மந்தியை முந்தி அமரச் செய்து வீதிவலம் வந்தவரின் காட்சி.

உயர்ந்தோரைப் போற்றுவதில் கவிஞர் திரு பழனி குமார் அவர்கள் நெறி தவறாதவர். பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்தாக ஒரு பாடல். நல்லவர்களை, நற்செயல் செய்வோரை வாழ்த்தி ஒரு பாடல் எப்படியெல்லாம் , எதன் வழியாகவெல்லாம் வாழ்த்தலாம் என்று ஒரு பாடல். தன பெற்றோரைப் போற்றி இரண்டு பாடல்கள். எம். எஸ் விசுவநாத, இளையராஜா மற்றும் ஏ  ஆர் ரகுமான் ஆகியோரின் சிறப்புகள் பற்றி ஒரு பாடல். திரு. பி பி . சீனிவாஸ் அவர்கள் பாடிய பாடலகள் சிலவற்றை நினைவூட்டி அவருக்கு அஞ்சலியாக ஒரு பாடல். நடிகருமான , இயக்குனருமான திரு . விசு அவர்களைப் போற்றி அகராதியாக ஒரு பாடல் என்று நல்லவர்களையும் , வல்லவர்களையும் போற்றிப் பல பாடல்களைத் திரு . பழனி குமார் இயற்றியிருக்கிறார்.

அறிவியல் கண்டுபிடிப்பாக வந்து இன்று அனைவரின் கையிலும் ஆறாவது விரல் போல ஒட்டிக்கொண்டு திகழும் கைப்பேசியை பற்றி ஒரு பாடலும் காட்சி ஊடகங்களுக்கு முன்னோடியான வானொலிப் பெட்டியைப் பற்றி ஒரு பாடலும் இயற்றியுள்ளார்.

வாகனங்களில் செல்பவர்கள் , கவனக்குறைவாலும், விதிகளைப் பொருட்படுத்தாமலும் , தன் விதியைப் பற்றிய அச்சமில்லாமலும் செய்யும் தவறுகள் கவிஞரின் மனத்தை நோகச் செய்திருக்கின்றன. அதைப்பற்றிச் சில பாடல்களில் அவர் குறிப்பிட்டுள்ளார். எல்லாம் போக அயல்நாட்டு அதிசயங்களையும் கவிஞர் அவர்கள் விட்டுவைக்கவில்லை. ஒரு பேருந்தில் தனியாகப் பயணம் செய்யும் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் நம் நாட்டு அரசியல்வாதிகளை ஒப்பிட்டு நோக்குகிறார். ஒரு பெரிய கப்பலினுள்ளே வீதிகள் இருப்பதைக் கண்டு வியந்திருக்கிறார். ஒரு ஓவியனின் அதிசய கற்பனையை பாராட்டுகிறார். பிரேசில் நாட்டில் ஒரு வித்தியாசமான மேம்பாலத்தைப் பற்றிப் பாடல் இயற்றியுள்ளார்.

வேறொரு நாட்டில் அந்தரத்தில் , வானுயரத்தில் நடந்த ஒரு விருந்துக் காட்சியை பாராட்டி இருக்கிறார். .

வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும், பல்வேறு கோணங்களையும் எடுத்துக்காட்டி அவற்றையெல்லாம் பாடல்களாக வடித்துள்ளார் திரு. பழனி குமார் அவர்கள்.

எல்லாவற்றையும் நானே சொல்லிவிட்டேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். நான் கூறியது கடுகளவுதான் . படங்களுடன் சேர்த்துக் கவிஞர் அவர்களின் பாடல்களை நீங்கள் படிப்பீர்களேயானால் அவர் எப்படிப் பார்த்துப் பார்த்து எவ்வளவு செய்திகளை உள்ளடக்கி , எத்தனைப் பாடல்களை எழுதியிருக்கிறார் என்பதை அறிவீர்கள். மேலும் எல்லாவற்றிற்கும் அடிநாதமாகக் கவிஞரின் பொதுநல வேட்கை திகழ்வதையும் நீங்கள் உணர் முடியும். இனி, நீங்கள் பாடல்களுக்குள் நுழையலாம் .

வாழ்க கவிஞர் பழனி குமார் !
வளர்க அவரது சமூகத் தொண்டு !

இப்படிக்கு அன்பன்,



**சிவானந்தம் நடராசன்**
**Ex-Chief Manager**
**State Bank of India**